இடங்களில் யூக்கலிப்டஸ் மரங்களை நடுவதற்குண்டான திட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. எங்கேயும் இயற்கை வளங்களை அழிக்கவில்லை. கரும்புச் சக்கைதான் பிரதான மூலப்பொருள். அதற்கு அடுத்தபடியாக யூக்கலிப்டஸ் மரமும், சவுக்கு மரமும் மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன. கரும்புச் சக்கை, யூக்கலிப்டஸ் மற்றும் Subabul *போன்ற மரங்களை வாங்கி, மரக்கூழ் தயாரிக்கப்படுகிறது. மரக்கூழை சில சமயங்களில் நாங்கள்* import *செய்திருக்கிறோம். பேப்பர் மில்லுக்குப் போதவில்லை என்றால்,* import *செய்துதான் சில சமயங்களில் நடக்கிறது. எங்கேயும் இயற்கை வளங்களை அழிக்காத அரசு இந்த அரசு. அந்த முறையிலேதான் காகிதபுரத்தில் இருக்கிற இரண்டு மில்களின்மூலம்ஆண்டு ஒன்றுக்கு 6 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி ஆகிறது. இப்போதுகூட நமது மொண்டிப்பட்டியில் இருக்கிற நிறுவனத்தில், மேல் பூசப்பட்ட அடுக்கு காகித அட்டை தயார் செய்கிறோம். சென்ற வருடம் 90 ஆயிரம் டன்தான் நாங்கள் உற்பத்தி செய்தோம். இப்போது 1 இலட்சத்து 80 ஆயிரம் டன் உற்பத்தித் திறன் கொண்ட அளவுக்கு அதை உருவாக்குவதற்கான முயற்சியை மேற்கொண்டு, காகிதபுரத்தில் இருக்கிற தொழிற்சாலை, மொண்டிப்பட்டியில் இருக்கிற தொழிற்சாலைகள் சிறப்பான முறையில் இலாபத்தை ஈட்டுகின்ற தொழில் நிறுவனங்களாக வளர்ந்துள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

204—

விசைத்தறிப் பூங்கா

***5034—திரு. சி. ராஜா:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், மகுடஞ்சாவடியில் விசைத்தறிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூன் 25]

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், மகுடஞ்சாவடியில் விசைத்தறிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், விருப்பமுள்ள தொழில் முனைவோர்கள் ஒருங்கிணைந்து, அவரது தொகுதிக்குட்பட்ட மகுடஞ்சாவடியில் விசைத்தறிப் பூங்கா அமைத்திட மாவட்ட நிருவாகம்மூலம் உரிய கருத்துரு அனுப்பினால், அதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா அவர்கள்.

முற்பகல் 10–30

திரு. சி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆத்மாவை வணங்குகிறேன். சென்னை–சேலம் வரை எட்டு வழிப் பசுமைச் சாலையைக் கொண்டு வந்த பசுமை நாயகன், குறுவை விவசாயிகளுக்கு வாழ்வு தந்து, உழவராய்ப் பிறந்து, முதல்வராய் உயர்ந்த (மேசையைத் தட்டும் ஒலி) எனது அரசியல் ஆசான், மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணார் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

தமிழ்நாட்டிலேயே, சேலம் மாவட்டத்தில் இளம்பிள்ளை, வேம்படிதாளம், மகுடஞ்சாவடி போன்ற பகுதிகளில் விசைத்தறிமூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற emboss, kotta போன்ற ஏழைகளின் பட்டுச் சேலைகள் இந்தியா முழுவதும் விற்பனை செய்யப்படுகின்றன. ஏன்; வெளி நாடுகளுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மறுஆய்வு செய்து, எங்கள் பகுதியிலே விசைத்தறிப் பூங்கா அமைத்துத் தர ஆவன செய்வார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் அமைப்பது தொடர்பாக 26–10–2017 அன்று சேலம் மாவட்ட ஆட்சியர் அவர்களுடைய தலைமையில், சேலம் மாவட்டத்திலுள்ள தொழில்முனைவோர்களை அழைத்து, பூங்கா அமைப்பது தொடர்பான செயற்குறிப்புகள் குறித்து ஆய்வு செய்திருக்கிறார்கள்; கலந்து பேசியிருக்கிறார்கள். அது முழுமை பெறாமல் இருக்கிறது. ஒரு பூங்கா அமைக்க வேண்டுமென்று சொன்னால், 25 ஏக்கர் நிலம் வேண்டும்; 50 தொழிற்கூடங்கள் அங்கே அமைக்கப்பட வேண்டும். மத்திய அரசு 40 சதவிகிதமும், மாநில அரசு 9 சதவிகிதமும் நிதி அளிக்கிறது. மீதமிருக்கின்ற தொகையை தொழில் முதலீட்டாளர்கள் வங்கிக் கடனாகவோ அல்லது சொந்த முதலீடாகவோ தருவார்களென்று சொன்னால், அங்கே பூங்காக்கள் அமைப்பதிலே எந்தச் சிக்கலும் இல்லை. அதற்கு முன்வர வேண்டுமென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா அவர்கள்.

திரு. சி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியில் இளம்பிள்ளை, வேம்படிதாளம் மற்றும் மகுடஞ்சாவடி பகுதியிலே இந்தப் பூங்காவினை அமைக்க அரசு முன்வந்தால், அங்கு தொழில்முனைவோர்கள் தொழில் செய்ய முன்வருவதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே உள்ள கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் எங்கள் பகுதியிலே பெட்ஷீட் இரகங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த பெட்ஷீட் இரகங்களை அதிக நாட்கள் பயன்படுத்துகின்ற வகையிலே, சங்கங்களிலே நிறைய இருப்பு வைக்கப்படுகின்றது. இந்த பெட்ஷீட்களை பெண்கள்தான் அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள். பெண்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பை வழங்குகின்ற வகையிலே, அந்தச் சங்கங்களின்மூலம், மாற்று இரகங்களை உற்பத்தி செய்திட

2018 ஜூன் 25]

வேண்டும். அதாவது, mat, *துண்டு போன்றவற்றையும் உற்பத்தி செய்வதற்கு ஆணை பிறப்பித்தால், இச்சங்கங்கள்மூலம் அதிகப்படியான வேலைவாய்ப்புகளை பெண்களுக்கு வழங்க ஏதுவாக இருக்கும். எனவே, இதனைச் செய்வதற்கு நமது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, இங்கே பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதற்கான நடவடிக்கைகள் கோ–ஆப்டெக்ஸ்மூலம் எடுக்கப்பட்டு வருகின்றன. எந்த ஒரு தேக்கமும் இல்லாத நிலையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 205, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

205—

வீட்டுமனைப் பட்டா

***37921—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எழும்பூர் தொகுதி, 104–வது வார்டு, சாஸ்திரி நகரில் வசிப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாட்டில் ஏழையெளியோருக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை எளிதில் கிடைத்திடச் செய்திடவும், மாண்புமிகு